1987 மே 4]

சுத்திகரிப்பு ஆலை வைத்தால்தான் அனுமதி வழங்கப்படும் என்ற விதியை வைத்திருக்கிறோம். ஏற்கனவே இருக்கிற ஆலைகள், புதிதாக வைக்கவேண்டுமென்று வற்புறுத்தலாமே தவிர, வேறுவழியில்லை. மீறுகின்றவர்கள்மீது வழக்குதான் தொடர முடியும் அதை அரசு தொடுத்துக் கொண்டு வருகிறது.

கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குனியமுத்தூர், மதுக்கரையில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி.

572—(*வினா எண். 11696) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குனியமுத்தூர், மதுக்கரையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான மாணவர் விடுதி ஒன்றினைத் தொடங்கிடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமங்கலம் அரசினர் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லம்.

573—(*வினா எண் 12424) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமங்கலத்தில் உள்ள அரசினர் மாணவர் பிற்படுத்தப் பட்டோர் இல்லத்தில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி குறிப்பாக, திருமங்கலம் பொருளாதார ரீதியிலே மிகவும் பிற்பட்ட பகுதி என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே அறிவார்கள். இந்தத்

திருமங்கலத்திலே உள்ள அரசினர் மாணவர் பிற்படுத்தப் பட்டோர் இல்லம் துவக்கப்பட்டு, 10 ஆண்டுகளாகியும் 50 மாணவர் கள்தான் சேர்க்கப்படுகிறார்கள். திருமங்கலத்தில் மட்டும் இரண்டு அரசு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. மொத்தம் 3,000-க்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்ற அந்த ஊரிலே 50 மாணவர்கள்தான் பிற்படுத்தப்பட்டோர் இல்லத்திலே சேர்க்கப் படுவது என்பது மிகக் குறைவு—யானைப் பசிக்கு சோளப் பொறியைப்போல. எனவே, இந்த 50 என்ற எண்ணிக்கையை 200 ஆக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசு நடத்துகின்ற மாணவர் விடுதியில் 200 மாணவர் விடுதி என்று எந்த விடுதியிலும் இல்லை. 50-லிருந்து 120 வரை சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இதை உயர்த்துவதற்கு இவ் வாண்டு அரசு பரிசீலிக்கும். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு. சைதை சா. துரைசாமி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள மொத்த பிற்பட்ட மாணவர் விடுதியினுடைய எண்ணிக்கை எவ்வளவு? சென்னை நகரத்தில் எத்தனை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, பிற்பட்டோர் இல்லங்கள் 558 இருக்கின்றன. சென்னையிலே எத்தனை என்பதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருமங்கலம் அரசினர் பிற்பட்டோர் இல்லத்தில் வருகின்ற கல்வியாண்டில் மாணவர்கள் எண்ணிக் கையை உயர்த்தி சேர்த்துகொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அதைப்பற்றி முயற்சி எடுக்கலாம்.